பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் 114 இதழ் 3 25-3-1988 (மார்ச்25-ஏப்ரல்8) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

திருப்பலி

பரிசுத்த வாரத்தின் திங்கள் 28-3-88 மாலை 5-00 மணிக்கு திருத்தலம் மந்திரிக்கும் ஆயரின் கூட்டுத் திருப்பலி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும். பெரிய வியாழனில் நடைபெறும் இத் திருச்சடங்கு இறை மக்களின் வசதிக்காக இத்தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

எல்லா மதத்தவர்களும் ஒன்றித்துச் செயற்பட யாழ். நகரில் ஒரு "நற்சமூக நடுநிலையம்"

"'பணி பெறவன்று பணிபுரியவே வந்தேன்'என்ற கிறிஸ்துவின் வாக்குக் கிணங்கச் செயற்பட முன்வரும் திருச்சபை, எங்கள் நாட்டின் இன்றைய சூழ்நிலையில், சமுதாய நலனுக்காகத் தனது பணியை நிறைவாக்க, இந்த 'நற் சமூக நடுநிலையம்' உருவாக்கப்படுகிறது" என யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை திறப்புவிழா உரையிற் குறிப்பிட்டார்.

பங்குனி 19ஆம் திகதி யாழ். நகரில், 4ஆம் குறுக்குத் தெருவிலுள்ள 115ஆம் இலக்க இல்லத்தில் "நற்சமூக நடுநிலையம்" திறந்து வைக்கப்பட்டது. "இங்கு வாழும் மக்களின் அடிப்படை மனித உரிமைகள், சமத்துவம், பாதுகாப்பு என்பனவற்றிற்கான நீண்ட போராட்டமானது, ஈடுசெய்ய முடியாத உயிர், சொத்து இழப்புக்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், சமுதாய, சமய, ஒழுக்க, கலாச்சார, சமூக, பொருளாதார துறைகளைக் கட்டி எழுப்ப முயலுவோம்" என்பதே நற்சமூக நடுநிலையத்தின் நோக்கமாகும். அதன் இயக்குனர் அருள்திரு. எஸ். ஜே. இம்மனுவேல் அடிகளாரின் முயற்சியால் உருவாக்கப்பட்டு யாழ். ஆயரின் ஆசீருடன் அது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மறைவட்ட குருமுதல்வர் அருள்திரு. எஸ். ஏ. மைக்கல்சாமி அ. ம. தி. இறைவணக்க வழிபாட்டை நிறைவேற்றினர். 70 பேர் பங்கு கொண்டு திறப்பு விழாவைச் சிறப்பித்தனர். யாழ். ஆயர் நடுநிலையத்தினை ஆசீர்வதித்து ஆரம்ப உரை நிகழ்த்தினர்.

இயக்குனர் தம் உரையில் "கோவிலை மட்டும் மையமாகக் கொண்டதாக, எமது கடந்த காலச் செயற்பாடுகள் அமைந்தன. உலகிலும், உலகுக்காகவும் திருச்சபை, என்ற வத்திக்கான் சங்க படிப்பினைகளின் பலனை உலகுக்கு நன்மை பயக்கும் விதத்தில்நாம் செயற்பட முனைவோம்" என்று குறிப்பிட்டுத் தாம், அரசியல், கல்வி, சுகாதாரம், சமயக்கலந்துரையாடல், பெண்கள், இளைஞர் போன்ற பத்து அம்சங்களை முதலிற் கருத்திற் கொள்ளவிருப்பதாகவும் கூறினர்.

இயேசுவின் மரணம்
மகிமையின் வாயில்
சாவின் கட்டுக்கள்
நொருங்கட்டும்
சத்தியத்தின் ஒளி பரவட்டும்

வையத்து வாழ்வு வளம்பெறட்டும்

வாசக அன்பர்களுக்கு எமது ஈஸ்டர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது அடுத்த இதழ் 8-4-88 அன்று வெளிவரும்.

ஆசிய மரபிற் குருத்துவப் பயிற்சி

ஆசியக் குருமட அதிபர்களினது மாநாடு, பிலிப்பைன்ஸ் நாட்டில் பங்குனித் திங்கள் 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ஆசிய ஆயர் பேரவையின் கல்வித்துறைக்குப் பொறுப்பான கிளியால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் 3 ஆயர்களும் 40குருக்களும் பங்கு பற்றினர். இலங்கையின் குருமட அதிபர்களின் பிரதிநிதியாகப் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறையியல் விரிவுரையாளர் அருள்திரு. J. நீக்கிலஸ் கலந்து கொண்டார்.

"குருமட மாணவர்களின் பயிற்சி இறைவனைப் பற்றிய அறிவுடன் மட்டும் நின்று விடாது இறை அனுபவத்தைப் பெறுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்,"

"ஆசிய நாட்டின் பெரும் பான்மையான மக்கள் வறியவர்களாயிருப்பதால் குருமாணவர்கள் ஏழைகளோடு ஏழைகளாக வாழ்ந்து நற்செய்தியை எளியவர்க்கு அறிவிக்கும் அப்போஸ்தலர்களாகப் பயிற்றப்பட வேண்டும். பல மதத்தினர் மத்தியில் வாழ்வதால் அவர்களோடு உரையாடல், உறவாடலை வளர்த்துச், சகோதரத்துவத்தைப் பேண வேண்டும். கிறிஸ்தவ மதத்தில் மேற்கத்தையத் தாக்கங்கள் கூடுதலாக இருப்பதால் எமது ஆசிய மக்கள் இறைவனை இலகுவாக அனுபவிக்க அவருடன் உறவு கொள்ள வழிபாடுகளும், சமயக் கலந்துரையாடல்களும் பண்பாட்டு மயமாக்கப்பட வேண்டும். குருமாணவர் பயிலும் இறையியல் எமது ஆசியச் சூழலுக்கேற்ற முறையிற் பயிற்றப்படவேண்டும்" என்ற கருத்துக்கள் சிறப்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இளவாலைக் கன்னியர் மட அதிபர் ஓய்வு பெறுகிறார்

அருட்செல்வி மேரி விக்ரரின் தமது கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவர் கடந்த 10 ஆண்டுகளாக இளவாலைக் கன்னியர் மடத்தின் அதிபராகக் கடமை ஆற்றியுள்ளார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சுப்பிரமணியம் திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வியாகிய இவர், இந்து பரம்பரையில் உதித்த போதிலும் இளவாலைக்கன்னியர் மடத்திற் கல்விபயிலும் காலத்தில் இறையருளாற் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். அத்துடன் நில்லாது அவர் திருக்குடும்பத் துறவற சபையிற் சேர்ந்து கொண்டார்.

மன்னார் திருக்குடும்ப மடத்திலும் யாழ். திருக்குடும்பக்கன்னியர் மடத்திலும் அதிபராகப் பல காலம் கடமை புரிந்தார். 1978 ஆம் ஆண்டு இளவாலைக் கன்னியர் மட அதிபராகப் பொறுப்பேற்றார். கல்விப் பணிபுரியும் அதே வேளையில் சமயப் பணியிலும் இவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

அமைதியான சுபாவம் உடைய இவர் விவேகம், அன்பு, சகிப்புத்தன்மை, மன்னித்து மறப்பது போன்ற சிறந்த குண இயல்புகளைத் தன்வசம் கொண்டவர். தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் அதேவேளையில் அவர்களுக்குத் தகுந்த புத்திமதிகளும் கூறி வழிநடத்துபவர். அதிகாரத்தினூலன்றி அன்பினூல் வழி நடத்தும் தாய் உள்ளம் படைத்த

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

தமது 83வது வயதில், பெப்ரவரி 6ஆம் நாள் யாழ். ஆயர் இல்லத்தில் இறந்த சில்லையூர் அருள்திரு எஸ். ஏ. சுவாம்பிள்ளை அடிகள்.

அருள்திரு சாவே அ. ம. தி. இறைபதமடைந்தார்

அருள்திரு அன்றூ எமில் சாவே அ. ம. தி. அடிகள் பிரான்ஸ் தேசத்தில் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி இறைபதமடைந்தார்.

1922ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பிரான்ஸில் பிறந்த இவர் 1948ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி தம் தாய் நாட்டிற் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1949ஆம் ஆண்டு யாழ். மறைவட்டத்தில் மறைப்பணியாற்ற இலங்கை மண்ணிற் காலடி எடுத்து வைத்தார்.

1953இல் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், 1954இல் மண்டைதீவிலும்பணியாற்றிய பின் 1955 முதல் நாவாந்துறையிலும், 1961 முதல் குருநகரிலும் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்து 1966ஆம் ஆண்டு தாயகம் திரும்பினர். எமது மண்ணில் மறைத் தொண்டாற்றிய அருள்தந்தை அவர்கள் இறைபதம்சேர இறைவனை வேண்டுவோம்.

தலைமைச் சங்கம்

சுதேச குருக்களைப் பற்றியும், அவர்களுடைய பணியைப் பற்றியும் அவர்களுக்கு வேண்டிய தேவைகளைப்பற்றியும் ஆலோசிப்பதற்காக ஆசிய ரீதியிலே ஒரு தலைமைச் சங்கக் கூட்டம் இந்த வருடம் ஆவணி மாதம் 22-ந் திகதி முதல் 25-ந் திகதி வரை கண்டி தேசிய குருத்துவக்கல்லூரியில் நடைபெறும்.இக்கூட்டத்தில் உரோமையிலிருந்து வரும் ஆயர்களுடன் ஆசிய ஆயர்களும் பெரிய குருமட அதிபர்களும் பங்கு பற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்து ஞாயிறு 27-3-1988

3 வது அனைத்துலக இளைஞர் தினத்தையொட்டி

உலகின் இளைஞருக்கும் யுவதிகட்கும் பரிசுத்த திருத்தந்தை அளிக்கும் செய்தி

"அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்," மரியாள்

அன்புக்குரிய இளம் மக்களே!

1. அடுத்த அனைத்துலக இளைஞர் தினத்தை அறிவிக்கும் முகமாக மீண்டும் உங்களுக்கு எழுதுகின்றேன், இது தலத் திருச்சபைகளில் 1988 குருத்து ஞாயிறன்று கொண்டாடப்படும். ஆயினும் இம்முறை அத்தினம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாயிருக்கும். ஏனென்றால், திருச்சபையில் இது மரியாளின் ஆண்டாகும். இது பெந்தெகோஸ்து விழாவன்று என்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்த ஆகஸ்ட் 15ஆம் திகதி மரியாளின் விண்ணேற்பு விழாவன்று இது நிறைவு பெறும்.

கிறிஸ்து சகாப்தத்தின் இரண்டாயிரம் ஆண்டின் முடிவில் பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் இடர்ப்படும் உலகினது வரலாற்றின் ஓர் இக்கட்டான கட்டத்தில் மரியாளின் ஆண்டு நம்மனைவருக்கும் ஒரு விசேட கொடையாகும். இவ்வாண்டிலே ஒரு புதிய ஒளியில் மரியாள் எமது கண்களுக்குத் தோற்றமளிக்கிறாள். அதாவது, மென்மையான உணர்வும் கனிவான அன்பும் நிறைந்த அன்னையாக, விசுவாசப் பாதையில் எமக்கு முன்னே நடந்து வாழ்வின் பாதையை எமக்குக் காட்டும் ஆசிரியையாகத் தோற்றமளிக்கிறாள். எனவே, மரியாளின் ஆண்டு நாம் மரியாளுக்கு ஒரு விசேட விதத்தில் செவிசாய்க்கும் ஆண்டாகும். இதுவே எதிர்வரும் அனைத்துலக இளைஞர் தினத்தின் விசேட பண்பாகவும் இருக்கவேண்டும். இளைஞர்களே, இன்று உங்களை ஒன்றாக அழைப்பவள் மரியாள். உங்களோடு சந்திப்பை ஏற்படுத்துபவள் அவளே. ஏனெனில், அவள் உங்களுக்கு கூற விரும்புவது அதிகம் உண்டு. முன்னைய ஆண்டுகளைப் போல் இம்முறையும் உங்கள் குருக்களின் வழிநடத்துதலின்கீழ் இளைஞர் தினத்தைக் கொண்டாடுவதில் முன்னின்று கலந்துகொள்ளத் தவறமாட்டீர்கள் என்பது எனது நம்பிக்கை.

மரியாளை மையமாகக் கொண்ட இளைஞர் தினம்

2. எனவே, 1988 அனைத்துலக இளைஞர் தினம் கன்னியும் இறைவனின் அன்னையுமான மரியாளையே தனது மையமாகக் கொண்டிருக்கும். அது செவிமடுக்க வேண்டிய ஒரு தினமாகவும் இருக்கும். எமது அன்னையும் ஆசிரியையுமான மரியாள் எமக்குக் கூறப் போவது யாது? மரியாள் தான் உண்மையில் எமது ஆசிரியை எனக் காட்டும் ஒரு வசனம் நற்செய்தியில் உண்டு. அது கலிலேயாவிலுள்ள கானாவூரில் நடந்த கலியாண விருந்தின்போது அவளால் கூறப்பட்ட ஒரு வசனமாகும். தனது திருமகனிடம் "இரசம் தீர்ந்துவிட்டது" என்று கூறிய பின், பணியாட்களிடம்" "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" எனக் கூறுகிறாள். (அரு. 2: 5)

இந்த வார்த்தைகள்தான் 1988 அனைத்துலக இளைஞர் தினத்துக்கு வழி காட்டியாக நான் தேர்ந்தெடுத்தவை. எல்லாக் காலங்களிலுமுள்ள ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் உரியதான மிக முக்கியமான ஒரு செய்தி இவற்றில் அடங்கியுள்ளது. "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்பதன் பொருள்: "எனது திருக்குமாரனாகிய யேசுவுக்குச் செவிசாயுங்கள்" அவரது வார்த்தையைப் பின்பற்றி நடந்து அவரில் நம்பிக்கை வையுங்கள்; உங்கள் வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆண்டவருக்கு 'ஆம்' என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்." இது மிகவும் ஊக்கமளிக்கும் ஒரு செய்தி, நாம் அனைவரும் அதன் அவசியத்தை உணருகிறோம்.

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" இவ்வார்த்தைகளில் மரியாள் எல்லாவற்றுக்கும் மேலாக, தனது சொந்த வாழ்க்கையின் ஆழ்ந்த இரகசியத்தை வெளியிட்டுள்ளாள். இந்த வார்த்தைகளில் அவள் முழுமையாகப் பிரசன்னமாயிருக்கிறாள். அவளது முழுவாழ்வும் இறைவனைப் பொறுத்தமட்டில் ஒரு பெரிய "ஆம்" ஆகவே இருந்தது. இது மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த ஒரு "ஆம்".

மரியாள் முழு அறிவோடும் முழு விருப்பத்தோடும் தன்னைக் கையளித்தாள்

அருள் நிறைந்தவளும் மாசற்ற கன்னியுமான மரியாள் தன் வாழ்வு முழுதும் இறைவனுக்கு முற்றும் திறந்த வண்ணமாக மிகக்கஷ்டமான வேளைகளிலுங்கூட அவரது சித்தத்துக்குப் பூரண இசைவுடன் வாழ்ந்தாள். கல்வாரிக் குன்றின் மீது சிலுவையடியில் இது உச்சுக்கட்டத்தை அடைந்தது. அவளது "ஆம்" என்றுமே மாறியதில்லை. ஏனெனில், அவள் தன் வாழ்வு முழுவதையும் இறைவன் கரத்தில் ஒப்படைத்திருந்தாள். "இதோ ஆண்டவரின் அடிமை! உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" (லூக். 1: 38) "மீட்பரின் அன்னை" என்னும் பொதுத் திருமுகத்தில் இது குறித்து நான் பின்வருமாறு எழுதினேன்: "உண்மையாகவே மங்கள வார்த்தையைக் கேட்டபோது மரியாள் தன் 'அறிவோடும் விருப்பத்தோடும் முழுமையாய்ப் பணிந்து இறைவனுக்குத் தன்னைப் பூரணமாகக் கையளித்தாள். இதன் மூலம் தூதர் வழியாகத் தன்னோடு பேசிய இறைவனுக்குத் தன் கீழ்ப்படிவுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். ஆகவே, அவள் தன் முழு மனிதத் தன்மையோடும் பெண்மையோடும் பதிலிறுத்தாள். 'முன் சென்று துணைபுரியும் இறையருளோடு' பூரண ஒத்துழைப்பும் 'தமது கொடைகளால் இடையறாது விசுவாசத்தைப் பூரணப்படுத்துபவராகிய' பரிசுத்த ஆவியின் செயலாற்றலுக்குத் தன் உள்ளத்தைத் திறந்து வைத்திருப்பதும் இந்த விசுவாச மறுமொழியுள் அடங்கியிருந்தன. (மீ. அ. 13).

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" ஆசிரியையாகிய மரியாள் ஆண்டவரின் முதற் சீடர் என்ற முறையில் செயற்படுத்திய முழு வாழ்க்கைத் திட்டமும் இன்று அவள் எமக்கு வகுத்துக் காட்டும் திட்டமும் இச்சிறு வாக்கியத்தினுள் அடங்கியுள்ளன. இது இயேசுக்கிறிஸ்து என்னும் உறுதியான அத்திவாரத்தின் மீது அமைக்கப்பட்ட வாழ்க்கைத் திட்டமாகும்.

வாழ்வின் அர்த்தத்தை இழந்து விடுவது அபாயமானது

3. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலகமானது பல்வேறு விதப்பிரச்சினைகளால் ஆட்டி அலைக்கப்படுகின்றது. வாழ்வின் அர்த்தத்தையே இழந்து விடுவது இவற்றுள் அபாயகரமான தொன்றாகும். எமது சமகால மக்களுட் பலர் வாழ்வின் உண்மையான அர்த்தத்தைக் கைவிட்டு, மிதமிஞ்சிய செலவு, போதைப் பொருள், மதுபானம், பாலியல் ஆகியவற்றில் ஒரு மாற்றுப் பொருளைக் கண்டு பிடிக்க முனைகின்றனர். அவர்கள் இன்பத்தைத் தேடுகின்றனர். ஆனால், அதன் விளைவு ஆழ்ந்த துன்பமும், வெறுமையான உள்ளமும், பல சந்தர்ப்பங்களில் அவநம்பிக்கையுமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் அநேக இளைஞர்கள் அடிப்படையான சில கேள்விகளைக் கேட்டுக்கொள்கின்றனர். எமது வாழ்வை இழக்காதிருக்கவேண்டுமானால் நான் எப்படி வாழவேண்டும்? எனது வாழ்வு உண்மையில் மகிழ்ச்சிகரமானதொரு வாழ்வாயிருக்க வேண்டுமானால் அதை எந்த அடிப்படையின் மீது கட்டியெழுப்புவது? என் வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுப்பதற்கு நான் யாது செய்ய வேண்டும்? குடும்பத்தில் பாடசாலையில், பல்கலைக்கழகத்தில், வேலைத்தலத்தில், நண்பர் வட்டத்தில், பெரும்பாலும் சிக்கலானதும் கஷ்டமானதுமான வாழ்க்கைச் சூழ்நிலைகளில் நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? இவை இளைஞராகிய உங்களிற் பலர் இன்று உங்களையே கேட்டுக் கொள்ளும் கேள்விகள், சில சமயங்களில் மிகப் பொருத்தமான கேள்விகள்.

ஒருபோதும் குறையாத சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கு உங்களுக்குத் துணைபுரியக்கூடியதான ஒரு உறுதியான

உலக அபிப்பிராயங்களுக்கு மாறாகச் செய்யத் துணிச்சல் தேவை

தீர்கள். "கடவுள் நம்மீது கொண்ட அன்பை அறியலானோம். அந்த அன்பை விசுவசித்தோம்" (1 அரு. 4: 16) இறைவனை விசுவசித்து அன்பு செய்வதன் அர்த்தம் என்ன என்பதை இந்த ஆண்டில் இளைஞர்களாகிய உங்களுக்கு மரியாள் விளக்குகின்றாள். விசுவாசமும் அன்பும் வெறும் வார்த்தைகளோ, தெளிவற்ற உணர்வுகளோ அல்ல. இறைவனை விசுவசித்து அன்பு செய்வதன் அர்த்தம் முழுமையாக நற்செய்தியின் ஒளியில் வாழப்படும் பிரமாணிக்கமுள்ள வாழ்வாகும். திருவார்த்தையின் மூலமாகவும் திருச்சபையின் போதனைகளிலும் இயேசு நாதர் எமக்கு என்ன கூறுகிறாரோ அதனையே எப்போதும் செய்வோம் என்ற உறுதிப்பாடே இதன் பொருள். ஆம், இது இலகுவானதன்று. நாகரீக பாணிகளுக்கும், உலகின் அபிப்பிராயங்களுக்கும் மாறாகச் செய்வதற்கு அதிக துணிச்சல் தேவைப்படுகிறது. ஆனால், இதுவே உண்மையில் வெற்றிகரமான, மகிழ்ச்சி பொருந்திய வாழ்க்கைக்குரிய திட்டமாகும்

மரியாள் கானாவூர்க் கலியாண விருந்தில் எமக்குக் கற்பிப்பது இதுவே. 1988 அனைத்துலக இளைஞர் தினத்தின்போது நாம் ஆழமாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதனை இதுவே.

அன்புக்குரிய இளைஞர்களே! மிக முக்கியமான இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுமாறு உங்களனைவரையும் அழைக்கின்றேன். வந்து உங்கள் அன்னையும் ஆசிரியையுமான இயேசுவின் தாய்க்குச் செவி கொடுங்கள்.

4. ஒவ்வொரு உலக இளைஞர் தினமும் ஆழமற்ற வெறும் வெளிக் கொண்டாட்டமாக ஆகிவிடாதிருக்க வேண்டுமானால், அதற்கு மறைவட்டம், பங்கு ஆகியவற்றின் மேய்ப்புப் பணி குறித்த செயற்பாடுகளிலும், இளைஞர் குழுக்கள், சங்கங்கள், இயக்கங்கள் ஆகிய

மறைவட்ட பங்கு ரீதியில் ஆயத்தம்

வற்றின் வாழ்விலும் தக்க ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இது தவக்காலத்தைக் குறித்ததாகும்.

மரியாயின் ஆண்டிற்குரிய அருட்கொடைகளையும், 1988 உலக இளைஞர் தினத்தின் கொடையையும், நிறைவாகப் பெற்றுக் கொள்வதற்காக இந்த ஆன்மீக ஆயத்தத்தை மேற்கொள்ளுமாறு உங்களை அழைக்கிறேன். மரியாயின் வாழ்வைக் குறித்துத் தியானியுங்கள். முக்கியமாக யுவதிகளும், இளம் பெண்களுமான நீங்கள் இவ்வாறு செய்யுங்கள். மாசற்ற கன்னியாகிய மரியாள் தனது சொந்த மகத்துவத்தையும், தனது மேலான அழைத்தலையும் உணர்ந்துள்ள ஒரு பெண். உங்களுக்கு ஓர் அத்திவாரத்தின் மீது, ஒரு கற்பாறையின்மீது உங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப நீங்கள் அனைவரும் விரும்புவீர்கள் என அறிவேன். உங்கள் கண்முன் நசரேத்தூர் கன்னியாகிய மரியாளை, ஆண்டவரின் தாழ்ச்சியுள்ள அடியாளைக் காண்கிறீர்கள். அவள் தன் மகனைச் சுட்டிக்காட்டி "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்று சொல்லுகின்றாள். அதாவது, யேசுவுக்குச் செவிசாயுங்கள்; அவருக்கும் அவரது கட்டளைகளுக்கும் பணிந்து நடவுங்கள்; அவரில் நம்பிக்கை வையுங்கள்; வெற்றிகரமான மகிழ்ச்சிகரமான வாழ்க்கைத் திட்டம் இதுதான்; வாழ்க்கைக்கு ஆழமான அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரேயொரு ஆதாரம் இதுதான்.

சென்ற ஆண்டு அனைத்துலக இளைஞர் தினத்தின் போது அருளப்பரின் பின்வரும் வார்த்தைகளைக் குறித்துத் தியானித்

உன்னதமான மாதிரி. வாலிபர்களும், இளம் ஆண்களுமாகிய நீங்களும் இதனைத் தியானியுங்கள். கலிலேயாவிலுள்ள கானாவூரில் மரியாள் கூறிய "அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்" என்னும் வார்த்தைகளைச் செவிமடுத்து நீங்களனைவரும் ஆரம்பத்திலிருந்தே இயேசு என்னும் உறுதியான அத்திவாரத்தின் மீது உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்ப முயலுங்கள். மரியாள் என்னும் மறைபொருள் மீது நீங்கள் தியானம் செய்வது அவளது வாழ்வை கண்டு பாவிப்பதில் வெளிப்பட வேண்டும். இறைவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பதை அவளிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ/த)

பதினைந்து பேர், முதலாவது வினவுக்குரிய விடையை எழுதி அனுப்பியுள்ளார்கள். எவருமே முழுமையான விடை எழுதவில்லை என அருள்திரு பீ. யேசுதாசன் அ. ம. தி தலைமையில் விடைகளைத் திருத்திய குழுவினர் கருதுகின்றனர். அனுப்பப்பட்ட விடையில் சிறந்த விடையை இங்கு பிரசுரிக்கிறோம், மாணவர்கள் பரீட்சைக்கு இவ்விடையை துணையாகக் கொள்ளலாமே தவிர, பூரணமானதாகக் கருதக்கூடாது. 2-வது வினவுக்குரிய விடை அடுத்த இதழில் வெளிவரும்.

வினா 3. ஆபிரகாம் இறைவனின் நண்பனாய் இருந்தபோதும், குறைகள் உள்ளவராயும் காணப்பட்டார். இக்கூற்றை உதாரணங்களுடன் ஆராய்க. (1—4—88).

வினா 4- மீட்பின் வரலாற்றிலே, ஈசாக் கொண்டுள்ள பங்கை விளக்குக. (8—4—88)

வினா 5. 'யாக்கோப்பின் வாழ்விலே, இறைபராமரிப்புச் சிறப்பான விதத்திற் காணப்படுகிறது' உதாரணங்களுடன் விளக்குக. (15—4—88)

வினவுடன் தரப்பட்டுள்ள திகதிகளுக்கு முன், அவற்றிற்கான விடைகளைப் பாதுகாவலன், அ. பெ. இல 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

முதலாவது வினவிற்கான பரிசு ரூபா 50-00 பெறும் விடை

1. பஞ்சாகமத்தின் தோற்றப் பின்னணியும் அதன் உள்ளடக்க முரண்பாடுகளும்

''பஞ்சாகமம்'' என்பது தேவன் பயன்படுத்திய மோயீ ஆகாய விரிவிற்கு மேலே வேதாகமத்தின் முதல் ஐந்து சபைப் பற்றி எழுத விரும் வானம் என்றும், ஆகாய விரி நூல்களையும் உள்ளடக்கிய பினர். இதனால் தமக்குத் வுக்குக் கீழே பூமி என்றும் பகுதியாகும். இதை எபிரேயர் தெரிந்தவற்றையும், பரம்ப பேரிட்டார். ஆதி 2:5 இல் ''தோரா'' (சட்டம்) என்பர். ரை பரம்பரையாகச் சொல்லி வரண்ட பூமியினை உண்டாக்கி ஏனெனில் இதில் வரலாற்று வந்ததையும் அறிந்து மோயீ மழையைப் பெய்யப் பண்ணிப் டன் சட்டங்கள் தரப்பட்டுள் சனின் பிறப்பு, வளர்ப்பு புல் பூண்டை உண்டாக்கினார். ளன. இவ்வைந்து நூல்களும் வாழ்க்கை பற்றி எழுதினர். இங்கு ஒரே படைப்பு இருமர வேதாகமத்துக்குக் கருவாக அத்துடன் நிற்காமல் மோயீ பில் கற்பிக்கப்படுகின்றது. ஒரு இருக்கிறது. சனுக்கு 1850 ஆண்டுகளுக்கு இடத்தில் தேவனை ''ஏலோ முன் நடந்தவற்றையும் [ஆபிர யீம்'' என்றும் மற்றைய இடத் காம்] அதற்கு முன் ஆதிமனி தில் தேவனை ''யாவே'' என் தனை தேவன் உண்டாக்கிய றும் அழைக்கிறது.

பஞ்சாகமம் முறையே ஆதி தையும், உலகப்படைப்பையும் யாகமம், யாத்திராகாமம், தாம் அறிந்ததி லிருந்தும், ஆதி 2:4 இலும், ஆதி 5: லேவியராகமம், எண்ணாகமம், கேட்டதிலிருந்தும், எழுத்து 1-31 இலும் ஆதாமின் வம்ச உபாகமம் என்னும் ஐந்து நூல் வடிவில் வழிவந்த மரபிலி வரலாறு இருமுறை தரப்படு களையும் உள்ளடக்கியது. இதில் ருந்தும் எழுதித் தம்முடன் கிறதைக் காணலாம். ஆதி 16:6 ஆதியாகமம் உலகப்படைப்புப் தேவன் வைத்திருந்த தொ இலும், ஆதி 21:14 இலுமாக பற்றியும், யாத்திராகாமம் டர்பைக் கூறியதுடன். தம் ஆதாம் இருமுறை துரத்தப் இஸ்ரவேலர் எகிப்துதேசத்தை இன, குலப் பெருமையும் படுகின்றார். யாத் 16, எண் 11 விட்டு தேவபலத்தின் மூலம் கூறினர். இலும் மன்னு இருமுறை வெளியேறியது பற்றியும் கூறு பொழியப்படுகிறது. சீனாய் கிறது. லேவியராகமம் பொது நடந்தவற்றை அப்படியே மலை என்றும், ஒரேபு மலை என் வழிபாடுகள், தனிவழிபாடு எழுதி மற்றவர்கட்குக் காட்ட றும் ஒரே மலை வர்ணிக்கப்படு கள் போன்றவற்றின் சடங்கு வேண்டும் என்ற நோக்குடன் கிறது. ஆதி 12, ஆதி 20 இலும் முறை பற்றிப் போதிக்கிறது. எழுதாமல், இறைவனுக்கும் சாராள் இருமுறை அன்னிய எண்ணாகமமானது பாலைவனப் தமக்குமுள்ள தொடர்பைக் அரசரால் கடத்தப்படுகின் பிரயாணத்தில் தேவன் இஸ்ர காட்ட வேண்டும் என்றும் றாள். இப்படியாக ஒரே நிகழ்ச்சி வேலரை நடத்தியதையும், தம்மை எப்படி போர்களில் பல சந்தர்ப்பங்களில் இருதட இஸ்ரவேலின் தன்மையை வெற்றியடையச் செய்தாரி வைகள் கூறப்பட்டுள்ளது. சில யும் பற்றிக் கூறி நிற்கின்றது. என்றும், தம்மில் எப்படி வேலைகளில் ஒன்றுக்கொன்று உபாகமம் கடவுளின் சட்ட கருணை காட்டினார் என்றும் மேலோட்டமாகப் பார்க்கும் ஒழுங்கையும், அதனை எப்படி காட்டவே இவைகளை எழுதி போது முரணாகவுள்ளது. சில அனுசரித்து நடக்க வேண்டும் னர். பகுதிகள் எழுதப்பட்ட வித என்று வற்புறுத்தும் போதனை இப்பஞ்சாகமத்தில் முரண் மானது உயிருள்ளதாகவும், களையும், புத்திமதிகளையும் பாடுகள் காணப்படுவதற்குக் அழகாகவும், மனிதப்பண்பு மிக கொண்டதாகும். காரணம் இப்பஞ்சாகமம் பல கதுமாகவும் சில பகுதிகள் பஞ்சாகமத்தின் ஆசிரியர் பாரம்பரிய முறைகளினூடாக எழுதிய விதமானது வரட்சி மோயீசன் என மிகத்தொன் எழுதப்பட்டிருப்பதேயாகும் யாகவும், உயிரற்றதாகவும் மை வாய்ந்த காலத்திலிருந்து இங்கு நான்கு பாரம்பரியங்கள் உள்ளது. நம்பி வந்தனர். ஆலை, கலந்துள்ளன. அவை யாவை, மோயீசனுல் முழுவதும் எழு ஏயோயீம் உபாகமம், குரு இப்படியான வித்தியாசங்க தப்படவில்லை என்பதுவே உண் எனும் பாரம்பரிய முறைகளா ளைக் கண்ட விவிலிய ஆராட் மையானது. மோயீசனின் கும். இப்பஞ்சாகமத்தை முழு சியாளர்கள் பஞ்சாகமத்தை காலம் கி. மு. 1000 ஆகும். மையாக விளங்க வேண்டுமா மிக நுணுக்கமாக ஆராய்ந்த ஆனால் பஞ்சாகமத்தின் புத்தக யின் பாரம்பரியங்கள் பற்றிப் னர் 1978 இல் றிச்சேட் வடிவுக்காலம் கி. மு. 500— பூரணமாக அறிய வேண்டும். சைமன் என்பவரும், 1753இல் 400 என்பது வேதாகம முரண்பாடுகளை நோக்கும் ஜோன் அஸ்டரக் என்பவரும் ஆராட்சியாளர் முடிவாகும். போது ஆதியாகமம் 1 ஆம் பஞ்சாகமத்தில் இரண்டு பாரம் ஆதலால் மோயீசனுல் பஞ்சா அதிகாரத்தில் தேவன் எல்லா பரியங்கள் உள்ளன என்று கமம் புத்தக வடிவாக எழுதப் வற்றையும் படைத்தபின் மனி கூறினர். 1853இல் கப்டெல்ட் படவில்லை என்பது திண்ணம். தனை ஆணும், பெண்ணுமாகப் என்பவர் ஆதியாகமத்தில் 3 ஆனால், மோயீசனுல் எழுதப் படைத்தார் என்றும், ஆதியா மரபுகள் உண்டு என்று தெளி பட்ட மூலப்பிரதி இஸ்ர கமம் 2 ஆம் அதிகாரத்தில் வாக்கினர். 1854இல் பஞ்சா வேலில் பல நூற்றாண்டுகளாக மனிதனை மண்ணிலே உரு கமத்தில் 4 மரபுகள் காணப் மாற்றமடைந்து சில புதுப் வாக்கி, பெண்ணை அவன் விலா படுகின்றன என்று கூறமுற்பட் பிரதிகளையும் பெற்று பஞ்சா என்பிலிருந்து உண்டாக்குகி டனர். 1870 இல் குயனென் கமாகக் காட்சியளிக்கின்றது. றார் என்றும், அவனுக்குத் 1878இல் வெல்காசன் என்ப துணையாக மற்றவர்கள் வர்களின் அயராத உழைப்பி பஞ்சாகமத்தை, ஆசிரியர் படைக்கப்பட்டனர் என்றும் னால் பஞ்சாகமம் 4 பாரம்பரிய கள் தொடுத்தபோது, அவர் கூறப்படுகின்றது. ஒரேவரலாறு மரபுகளின் கலவை எனக் கூற. களுக்கு இஸ்ரவேலர் எகிப்தி இருமுறை, இருபாரம்பரிய அது எல்லோராலும் ஏற்றுக் லிருந்து வெளியேறியமை, மரபிலே கூறப்படுகின்றது. கொள்ளப்பட்டது. பாலும் தேனும் ஓடும் கானான் உலகப்படைப்பிலே (ஆதி 1: விவிலிய ஆராட்சியின் படி தேசத்திலே குடியிருந்தமை 6-7) ஜலத்திலிருந்து ஜலத்தை முதற் பாரம்பரியமான யாவே போன்ற முக்கிய நிகழ்ச்சிகள் ஆகாயவிரிவின் மூலம் பிரித்து பாரம்பரியமானது கி.மு. 9ஆம் ஞாபகத்திலிருந்தன. இவற் நூற்றாண்டளவில் தேவாலயத்தில் எழு றைச் சேகரித்தபோது இவற் தப்பட்டது. அதற்கு அடுத்த றையெல்லாம் வழி நடத்த எலோயீம் பாரம் பரியமானது, கி.மு 8ஆம் நூற்றாண்டில்சமாரி யாவில் எழுதப்பட்டது. வட அரசின் அழிவுக்குப் பின் இவ் விரு பாரம்பரியங்களும் ஒன் றாக இணைக்கப் பட்டன. மன் னன் எசேக்கியாஸ் காலத்தில் ஜெருசலேமில் எழுதப்பட்ட உபாகம மரபு, மன்னன் யோசி யாஸ் காலத்தில் ஆலயத்தில் கி.மு. 622இல் கண்டு பிடிக்கப் பட்டு, மற்ற இரு பாரம்பரியங் களுடன் கி.மு. 6ஆம் நூற்றாண் டில் இணைக்கப்பட்டது. குருக் கள் பாரம்பரியம் பபிலோனிய அடிமைத்தனத்தின் போது கி.மு. 475 இல் எழுதப் பட்டு, நாடு திரும்பிய பின் 420இல் ஏனைய பாரம்பரியங்களுடன் இணைக்கப் பட்டது. இந்நான்கு பாரம் பரியங்களின் தொகுப்பாக நாம் இன்று காணும் தோரோ எனும் பஞ்சாகமம் தொகுக்கப்பட்டது.

இவ்வண்ணமான நான்கு பாரம் பரியங்கள் ஒன்றாக கலந்து விட்டதாலேயே, பஞ் சாகமம் ஆனது, பல உள்ள டக்க முரண் பாடுகளைக் கொண்டு காணப்படுகிறது.

செ. டேவிற் பரிமளச்செல்வன். கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம், பரந்தன்.

செபமாலைத்தாசர் சபை

இயற்கைக்கு மெல்லென சாமரம் வீசிக் கொண்டிருந் தான் வாயுகவான். விண் ணும் மண்ணும் தொட்டதனால மெய்சிலிர்த்து தான் அடைந்த இன்பத்தை நில மகள், விரிந்த மலர்க்குவியல் களாகக் கொட்டி மகிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் நெல்லிமரக் கிளைகள் அசைந் தாட, கழுகுஞ் சோலைகள் வளைந்தாடி வாயிலின் இரு மருங்கிலும், நிற்க, மாமரத் தோப்பு கலகலத்து நிற்கும் தோலகட்டியை யாழ் நகரில் அறியாதார் யாருமில்லை! ''ஜில்'' எனக் குவிர்ந்து வரும் கடற்காற்று. தலையசைத்து சிரித்து நிற்கும் முந்திரிகைச் செடிகள். சில வருடங்களின் முன்னர் இப்படி! அன்று?

கருகிக் காய்ந்த நிலத்தின் மேல் கற் பாறைகள், பட்டினி கிடந்தவனைப் போல் தள்ளாடி நிற்கும் எருக்கலைச் செடிகள். ''பஞ்சம்'' என்ற சொல்லிற்கு அர்த்தம் கொடுத்துக் கொண் டிருக்கும். அன்னமுளுக்கள், சித்தாப் பழமரங்கள், பைத்தி யம் பிடித்தவனைப் போல் உரு மாறி நிற்கும் கள்ளிக் கும்பல் கள் — இவைதான் தொல கட்டி ஆச்சிரமப் பிரதேசத் தின் அன்றைய சொத்துக்கள்!

1928ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் இன்று நறுமணம் கமழும் செபமாலைமாதா துறவற சபை யின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன் னாள். ஆண்டுகள் உருண் டோடி இன்று வரை விழா கண்டு கொண்டிருக்கிறது. இச் சபையின் வளர்ச்சிப் பாதை யில் ஸ்தாபகர் அருட்தந்தை தோமாஸ் அடிகளாரின் ஏக்கங் கள், மகிழ்ச்சிகள், நம்பிக்கை கள், கனவுகள் எத்தனை எத் தனை! ''கண்ணை இமை காப் பது போல்'' இத் துறவற சபையின் இலட்சியப் பய ணத்தை நிறைவேற்ற அடிகளார் அயராது உழைத்த வரலாறு பெரியது!

அன்னைத்துகிலும் செபமாலை யின் புகழினைப் பறைசாற்ற உதித்த செபமாலை மாதா துறவற சபையார் இவ் வாண்டு பெப்ரவரித் திங்கள் 2ஆம் திகதி வரை விழாக் கொண்டாடியதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. ஆரம்பகாலம் தொட்டே எத் தனையோ எதிர்ப்புகள் இடை யூறுகள் மத்தியிலும் கன்னித் தாயின் அற்புதங்களினால் அன் னையின் துறவறசபைக்கு புத் துயிர் அளித்துக் கொண்டிருக் கிறாள், ''தாயின் மடியில் குழந்தை தவழ்வது போல்'' செபமாலை அன்னையின் கரங் களுடன் பிணைக்கப்பட்டவர்க ளாக. இச்சபையார் உள்ள னர். அனைத்துலகிற்கும் உண் மைச் சமாதானத்தை அளித்த அன்னை விடுத்த செபம்-தபம் நிறைந்த வாழ்க்கைக்கு அர்த் தம் கொடுத்துக் கொண்டிருக் கும் செபமாலை மாதா துற வற சபை கடல் கடந்து பாரதம் வரை கிளைபரப்பி இன்று அளப்பரிய பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக் கிறது.

R. நித்தியானந்தன்.

''நித்திய காலமும் உனை உணர்வேன்''

அணைத்தெனை ஆள்வதற்கோ — இறைவா
அணைத்தெனை ஆள்வதற்கோ — கைகள்
அகல விரித்திருக்கிறீர் — சிலுவையில்
அகல விரித்திருக்கிறீர்.

எனைப் பிரிந்தேகாமல் — இறைவா
எனைப் பிரிந்தேகாமல் — கால்கள்
இணைக்கப் பட்டிருக்கிறதோ — சிலுவையில்
இணைக்கப் பட்டிருக்கிறதோ

மறைத் தெனைக் காப்பதற்கோ — இதயத்துள்
மறைத் தெனைக் காப்பதற்கோ — இறைவா
மார்பைத் திறந்திருக்குதோ — ஈட்டியும்
மார்பைத் திறந்திருக்குதோ.

கறைப்பவக் கடல் கடப்பேன் — சிலுவையில்
கறைப்பவக் கடல் கடப்பேன் — மோட்சக்
கரையினிலுனையணைவேன் — நித்திய
காலமு முனையுணர்வேன்.

நவாலியூர், சிறில் சுகந்தரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாருக்குக் காவல்?

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் இந்திய அமைதிப் படை, வடக்கு, கிழக்கில் பெருவாரியாகக் குவிக்கப்பட்டது. பல தேசப்பிரிய குழுக்கள் இதனையிட்டு பெரிதும் கவலைப்பட்டனர். பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மட்டுமன்றி எம்மவர்க்கும் இது வேதனையளித்தது.

ஆனால், இலங்கை இராணுவம், வடக்கு, கிழக்குக்கு வருவது பற்றி எம்மவர்களிடம் இன்று கேட்டால், ''ஐயோ, வேண்டாம்'' என்று கூறுமளவுக்குப், பயமும், வெறுப்பும் கலந்த பதிலே வெளிவருவதைக் காண்கிறோம்.

மட்டக்களப்பு நகரில் அண்மையில் நடந்த கண் மூடித்தனமான தாக்குதலானது இலங்கை இராணுவம் சாதாரண சூழ்நிலைகளில் கூட இனத்துவேஷத்துடன் செயற்படும் கொடுமையைச் சித்திரிக்கிறது.

இனப் பிரச்சினை, பயங்கரவாதச் செயற்பாடுகளை உருவாக்கியது. பெருவாரியான இளைஞர்கள் ஆயுதம் ஏந்த முன்வந்தமைக்கு இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களும், சித்திரவதைகளும், உடமை அழிப்புக்களும் ஒரு முக்கிய தூண்டுகோலாகும்.

தமிழர்கள் எல்லாரும் ''கொட்டியா'' (புலி) என நாமம் சூட்டப்பட்டமை மட்டுமன்றி பயங்கரவாதிகளாகவே கணிக்கப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் பலருக்குப் ''பூசா'' நிரந்தர வதிவிடமாகியது. அத்தோடு எண்ணிலடங்காத இளைஞர்கள், இராணுவ முகாம்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இத்தனை அனுபவங்களும் பழைய கதையாயில்லாமல் இன்றும் தொடரும் நிலையாயிருப்பதையும் மறுக்க முடியாது. எனவே தான், அந்நிய இராணுவத்தின் பிடியில் வாடும் இவ்வேளையிலும், சொந்த இராணுவத்தினரை அனுமதிக்க மறுக்கும் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

முந்நாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா, தம் ஆட்சியின் இறுதி நாட்களில், ''தென்னகப் படை'' என்ற இராணுவப் பிரிவை உருவாக்கியது தீர்க்கதரிசனமான செயல் என்று வர்ணிக்கப்படுகிறது. நாட்டின் இறைமை, ஐக்கியத்தை மனதிற் கொண்டு, மககளை அந்நியமாக்கக்கூடிய ஆபத்திலிருந்து காத்துக் கொள்ளவே இந்தத் ''தென்னகப் படை'' உருவாக்கப்பட்டது.

எமது நாட்டிலும், வடக்கு, கிழக்கில் நிலைமைகள் வழமைக்குத் திரும்ப வேண்டும் என்றால் ''வடக்குப்படை'' என அழைக்கத்தக்க ஒரு இராணுவப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும். இப்படையே, தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதாக இருக்கும். இன ரீதியாக, இராணுவத்தின் கொடுமைகளுக்குத் தமிழ் மக்கள் இரையாகாதிருக்க இது ஒன்றே வழிவகுப்பதாயமையும்.

இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தப்படும் சூழ்நிலைகள் உருவாகும்போது, எமக்கென பொலிஸ் பிரிவு நிச்சயம் உருவாகும். அவ்வாறே இன அழிப்பு ஏற்படுத்தாத ஒரு இராணுவமும் உருவாகும் என எதிர்பார்ப்போம்.

எம்மவரைக் காக்கச் சிங்கள இராணுவம் தமிழர் பகுதிகளுக்கு இன்று வாவில்லை. மீண்டும் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கிப் பாதுகாக்கவே, இங்குவர முயலுகிறார்கள் அகன்ன நிறைவேற்றத் தமிழரை அழிப்பதே இவர்களுக்குத் தெரிந்த ஒரேவழி.

இவர்களுடைய நோக்கமும் மாறி, வழிமுறையும் மாறிலை, தேசிய இராணுவத்தின் ''வடக்குப் படை'' உருவாகி, அதுவே எமது நாட்டின் இறைமை, ஐக்கியம் ஒருமைப் பாட்டின் காவலன் ஆகும் என்பது வெள்ளிடைமலை.

''அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை''

''மீட்பரின் அன்னை''

திருத்தந்தையின் சுற்றுமடல் (8)

ஆகவே, அந்தத் திருப்பகனின் தாய் மீட்பர் பிறப்பு அறிவிப்பிலும் பின்பு வந்த நிகழ்ச்சிகளிலும் தனக்குக் கூறப்பட்ட வற்றை மனதிற் கொண்டு தன் உள்ளத்திலே விசுவாசத்தின் ''புதுமையை'' — புதிய உடன் படிக்கையின் ஆரம்பத்தை தன்னுள்ளே தாங்கியிருக்கின்றாள். இதுவே, நற்செய்தியின், மகிழ்ச்சிக்குரிய நற்செய்தியின் ஆரம்பமாகும். ஆயினும் அந்த ஆரம்பத்தில் ஒரு வித மறைபொருள் பாரத்தை, புனித சிலுவை அருளப்பரின் வார்த்தைகளின் படி ''ஒரு வித விசுவாசத்தின் இரவை,'' ஒரு வித ''திரையை'' காண்பது கடினமல்ல, இத்திரையினூடாகவே கண்ணுற் காணமுடியாத இறைவனை அணுகி, அந்த மறை பொருளோடு நாம் நெருங்கி வாழவேண்டியிருக்கிறது. இந்த வித தத்தில் தாய் மரியாள் அநேக வருடங்களாகத் தனது மகனின் மறை பொருளோடு நெருங்கி வாழ்ந்து, தனது விசுவாசப் பயணத்தில் முன்னேறிச் சென்றாள். இதே வேளையில் யேசு ''ஞானத்தில் முதிர்ந்து-கடவுளுக்கும் மனிதருக்கும் மேன்மேலும் உகந்தவரானார். (லூக் 2:52). இறைவன் அவர் மேல் கொண்டிருந்த பிரியம் மக்களின் கண்களுக்கு மேன் மேலும் தெளிவாகப் புலப்பட்டது. கிறிஸ்துவைக் கண்டறிவதற்கு அனுமதிக்கப்பட்ட முதல் மனிதப்பிறவி, சூசையோடு அதே நசரேத்தூர் வீட்டில் வசித்த மரியாளே.

மரியாள் விசுவாசத் திருப்பயணத்தில் முன்னேறிச் சென்றாள்

ஆயினும், தேவாலயத்தில் அவருடைய தாய் அவரைக் கண்டு பிடித்த போது ''மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்துவிட்டாய்?'' என்று கேட்ட போது, பன்னிரு வயதுடைய யேசு ''என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கூறினார் ''அவர் சொன்னது அவர்களுக்கு (மரியாளுக்கும் சூசைக்கும்) விளங்கவில்லை'' (லூக் 2:48—50) நற்செய்தியாளர் மேலும் கூறுகிறார் ''தந்தையைத் தவிர வேறெவரும் மகனை அறியார்'' (மத். 11:27) என்பதை யேசு உணர்ந்திருந்தார். ஆகவே, அவருடைய இறைமகன் தன்மையின் மறை பொருள் அவருடைய அன்னைக்கு முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அவள் விசுவாசத்தின் மூலமே இம்மறை பொருளோடு ஒன்றித்து வாழ்ந்தாள்! ஒரே கூரையின் கீழ் தன் மகனருகில் வாழ்ந்து, ''தன் மகனோடு கொண்டுள்ள ஐக்கியத்தைப்'' பிரமாணிக்கமாகப் பாதுகாத்து வந்த அவள், ''விசுவாசத் திருப்பயணத்தில் முன்னேறிச் சென்றாள்'' என்பதை திருச்சங்கம் வலியுறுத்துகிறது. (தி.58) அது போலவே கிறிஸ்துவின் பிரசித்த வாழ்வையும் (மாற்கு 3:21-35) ''விசுவசித்தவள் பேறு பெற்றவள்'' என எலிசபேத்தைச் சந்தித்த போது அவள் கூறிய ஆசியுரை நாளுக்கு நாள் மரியாவிடத்தில் நிறைவேறிக் கொண்டே வந்தது.

மரியாளின் மைந்தன் துன்புறும் மனிதனாய் துயரத்தில் ஆழ்ந்தவராயிருந்தார்

18. மரியாள் தனது திருமகனின் சிலுவையடியில் நின்ற வேளையில் இந்த ஆசியுரை தனது முழுக் கருத்தையும் அடைகின்றது (அரு. 19:25) ''இறைவனின் திட்டமின்றி'' இது நிகழவில்லை எனத் திருச்சங்கம் கூறுகிறது. மரியாள் ''தன் ஒரே மகனோடு கடுமையாகத் துன்புற்றாள்; தாயுள்ளத் தோடு தன்னையே அவரது பலியுடன் இணைத்தாள்,'' தான் பெற்றெடுத்த மைந்தனைப் பலியிடவும் அன்புடன் இசைந்தாள்'' இவ்விதமாக மரியாள் ''தன் மகனோடு கொண்ட ஒன்றிப்பைச் சிலுவை வரையும் வடாது காத்து வந்தாள்.'' இது. விசுவாசத்தின் மூலம் வந்த ஒன்றிப்பு, ஆரம்பத்தில் தேவதூதன் கூறியசெய்தியைக் கேட்டபோது அவள் கொண்ட அதே விசுவாசம்தான். அந்த வேளையில் அவள் பின்வரும் வார்த்தைகளையும் கேட்டிருந்தாள், ''அவர் மேன்மைமிக்கவராயிருப்பார்... அவருடைய தந்தையாகிய தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குலத்தின் மீது என்றென்றும் அரசாள்வார்; அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது'' (லூக் 1:32-33) மனித முறையில் சொல்லப் போனால், இப்போது சிலுவையடியில் நிற்கின்ற மரியாள், இந்த வார்த்தைகளுக்கு முற்றும் எதிர்மாறான ஒரு நிலைக்குச் சாட்சியாகவே நிற்கிறாள். அந்தச் சிலுவை மரத்திலே அவளது மகன் குற்றவாளியைப் போல் வேதனைப்படுகின்றார். ''இகழப்பட்டவர், மனிதரால் புறக்கணிக்கப்பட்டவர்; அவர் துன்புறும் மனிதனாய் துயரத்திலாழ்ந்தவராய் இருந்தார்... அவர் இகழப்பட்டார் நாம் அவரை மதிக்கவில்லை'' அழிக்கப்பட்டவர் போலக் காணப்படுகிறார் (இசை 53:3-5). நம் அறிவுக்கு எட்டாத கடவுளின் திட்டங்களின் முன்னிலையில் மரியாள் காட்டிய விசுவாசத்தின் கீழ்ப்படிவு எத்துணை பெரியது, எத்துணை வீரத்துவம் மிக்கது! ''ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட செயல் முறைகளையுடைய'' (உரோ 11:33) ''கடவுளுக்கு எவ்வளவு முழுமையாகத் தன்னைக் கையளித்தாள், தனது புத்தி சித்தம் அனைத்தினதும் முழு உடன் பாட்டை அளிக்கின்றாள்'' (இ.வெ 5). அவளுடைய ஆன்மாவில் இறையருள் எவ்வளவு வல்லமையோடு செயலாற்றுகின்றது! பரிசுத்த ஆவியின் செல்வாக்கும், அவரது ஒளியும், வல்லமையும் அதில் எவ்வளவு ஊடுருவி நிறைந்துள்ளது.

மனிதவரலாற்றிலே இதுதான் விசுவாசத்தின் மிக ஆழ்ந்த வெறுமையாக்கலாக (Kenosis) இருக்கக் கூடும்

இந்த விசுவாசத்தின் மூலம் கிறிஸ்து தம்மை வெறுமையாக்கியதில் மரியாளும் அவரோடு பூரணமாக ஒன்றித்திருக்கிறாள், ஏனெனில், ''கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார்.'' தொல் கொத்தாவிலே ''அவர் தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவிற்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிபவரானார்.'' (பிலிப் 2:5-8) சிலுவையடியில் மரியாள் விசுவாசத்தின் மூலம் தன்னை வெறுமையாக்கும் இந்தத் திடுக்கிடச் செய்யும் மறை பொருளில் பங்கு பெறுகிறாள். மனிதவரலாற்றிலே இது தான் விசுவாசத்தின் மிக ஆழ்ந்த வெறுமையாக்கலாக (Kenosis) இருக்கக் கூடும். விசுவாசத்தின் மூலம் அன்னை தன் மகனின் மரணத்தில், அவரது மீட்கும் மரணத்தில் பங்கு கொள்கிறாள். ஆனால் ஒட்டமெடுத்த சீடரின் குறைவான விசுவாசத்துக்கு மாறாக, அவளுடைய விசுவாசம் எவ்வளவோ தெளிவான விளக்கமுடையதாக இருந்தது. தாம் சிமியோனால் முன் கூறப்பட்ட ''முரண்பாட்டின் அறிகுறி'' என்பதை யேசு கொல்கொத்தாவிலே சிலுவையின் மூலம் திட்டவட்டமாக உறுதிப்படுத்தினார். அதே வேளையில் சிமியோன் மரியாளுக்குக் கூறிய வார்த்தைகளும் கொல்கொத்தாவிலே நிறைவேறின. ''உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்.''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நெஞ்சே உனக்குச் சில....! (2)

போதும் என்ற மனம்

காயப்பட்ட என் அன்பு நெஞ்சே நீ முற்றிலுமாகக் குணப்பட வேண்டாமா? வேதனைக்குப் பயந்து காயங்களைக் கழுவாது விட்டால் அவை புரையோடிப் போய் குணப்படாதன்றே! நெஞ்சே திடன்கொள். நீ நிச்சயமாய் நலன்பெறுவாய். இன்றும் வேதனை தெரியாதபடி அன்பு எனும் எண்ணெயிட்டு இதயக் கதவுகளைத் திறப்போம். உன் வாழ்க்கைப் பாதையின் ஒவ்வோர் அடிகளையும் அலசிப் பார்ப்போம்.

'நெஞ்சே நீ உன் வீழ்ச்சியில் கலக்கமோ, எழுச்சியில் மயக்கமோ கொள்கிறாயா? இதனால் அருமந்த வாழ்க்கையை அர்த்தமற்றதாய் ஆக்கிக் கொள்கிறாயா?

உன் வாழ்க்கை வண்டி ஆசையையும், நம்பிக்கையையும் மாத்திரமே அச்சாகக் கொண்டு சுழல்கிறதா?

எல்லாமே வேண்டும்; வேண்டும் என்கிற உள்ளம் விரிவடைந்து கொண்டே போகிறதா? என் நெஞ்சே போதும் என்கிற பொன் செய்யும் மனம் உன்னிடம் வந்ததேயில்லையா? உன் தலைமயிரெல்லாவற்றையும் எண்ணியவருக்கு உனக்கு எச் சந்தர்ப்பத்தில், என்ன தர வேண்டுமென்பது தெரியாதா, நெஞ்சே?

என் அன்பு நெஞ்சே! 'ஆசைகள் அற்ற இடத்தில், குற்றங்களும் அற்றுப் போகின்றன' என்பதை ஏன் உணருவதில்லை?

இருப்பது போதும், வருவது வரட்டும், போவது போகட்டும், மிஞ்சுவது மிஞ்சட்டும் என்ற சலனங்களுக்கு ஆட்படாத பற்றற்றவாழ்க்கையை வாழ நீ ஏன் முயற்சி செய்யக் கூடாது!

என்மனமே, நீ துன்பங்களை இறைவனின் சோதனை என்று ஏற்றுக் கொண்டுவிட்டால் உனக்கேன் வேதனை வரப் போகிறது? எம் நேசருக்கு வந்த வேதனைகள், சோதனைகளில் ஆயிரத்தில் ஒரு மடங்காவது உனக்கு வந்ததில்லையே பின்னர் ஏன் சஞ்சலப்படுகிறாய்? சற்றே சிந்தித்துப்பார். உனக்கேற்படுகின்ற துன்பங்களுக்காகவும், துயரங்களுக்காகவும் கலங்குவதும் கண்ணீர் சிந்துவதும் வீணல்லவா? கலங்காதே நெஞ்சே! 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்கிற நம் அருள்நாதனின் ஆறுதல் மொழி உன் இதயத்தின் மூலை முடுக்கெங்கும் ஒலிக்கட்டும். அவ்வொலிகேட்டு உன் பல வீனமான இதயம் புதுப்பலம் பெறட்டும்.

செல்வி ஏ. ஆர். இந்திரா
பதுளை

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
25-03-88

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

பிறந்தவர் இறப்பது இயற்கையின் நியதி.

இரந்தோரை நினைப்பது மனித நிகழ்வு.

இவைச் சமயச் சடங்குகள், சமுதாய சம்பிரதாயங்கள் வெளிக்காட்டுகின்றன. ஆனால் இவை இறந்தும் உயிர்வாழும் இறவா நெஞ்சங்களுக்குச் சான்று பகர்கின்றனவா என்பது கேள்விக்குறியே.

உண்மையில் அவர்கள் வார்த்தைகளும் வாழ்க்கையும் இணைந்த நிலையில், போதனையும் சாதனையும் ஒருமித்து நிற்கத், தனக்காக வாழாது. பிறருக்காக வாழ்ந்ததால்தான் இன்றும் அழியாத கோலங்களாக அழகாகக் காட்சியளிக்கின்றார்கள். பிறருக்குப் பசனையாகிவிட்ட அவர்களது வாழ்க்கை இன்று புதிய ஒரு தாரகையாய்ப் பிரகாசிக்கின்றது.

அதேவேளை, இன்று எத்தனைபேர் வாழ்வில் பிடிப்பின்றி நடைப்பிணமாக, ஜனத்தொகைக் கணிப்பீட்டிற்கு மட்டும் பங்களிப்புச் செய்ய உயிர்பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்ந்தும் இறந்தவர்களே, இறந்தவர்களை நினைவுகூரும் வேளை இறந்தவர்களாய்த் தோற்றம் தரும் இவர்களுக்காகவும் இறைவனை வேண்டுவோம். இவர்களுக்காக வேண்டும்போது எமது வாழ்க்கையைப் பற்றியும் சற்று சிந்திப்போம்.

எந்த வகையில் எமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டோம்? எமது வாழ்க்கை வீட்டிற்கு, நாட்டிற்குச், சமூகத்திற்கு எப்படி உதவுகின்றது? எமது வாழ்க்கையின் வளர்ச்சிப்படி நிலைகளை வயதாற் கணிப்பிடாமல் தினம் நாம் செய்யும் நற் செயல்களால் மதிப்பிடுவோம். அப்பொழுதுதான் நாம் அர்த்த முடைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டமுடியும்.

மனச்சாட்சியுடனான செயற்பாடே மனிதனைப் புனிதனாக்குகின்றது. இறவா வரம் பெற்ற ஜீவன்களின் வாழ்க்கைத் தத்துவங்கள் இதனையே தெளிவுபடுத்துகின்றன.

உன் வழிகாட்டி மனச்சாட்சி
உன் செயற்பாடுதான் உன்நண்பன்.

அன்பு நெஞ்சன் வி. பி.

குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-14

குருசுமுத்தண்ணை: என்ன அன்னம்மா உன்ர வீட்டுக்கு முன்னால ஒரே மணமும் குப்பையுமாய் இருக்கு.

அன்னம்மா: வீட்டை இப்பதான் வெள்ளையும் அடிச்சு துப்பரவு செய்தனான் அண்ணை வெளியிலதான் குப்பைக்காறன் வராததால கிடக்கு.

குருசு: வீடு இப்ப வெள்ளை அடிச்ச கல்லறை மாதிரி கிடக்கு. இதாலதானே இப்ப வராத வாந்தி பேதி, வயிற்றோட்டம் எல்லாம் வருகுது, அவையள் வாறதுக்கு முன்னால இவையள் வந்துடுவினம்.கவனம்! பிறகு எல்லாரையும்தான் வெளியில போடவேண்டி வரும்.

அருள் திரு. ரூபன் மரியம் பிள்ளை

இரு மனித உள்ளங்கள்
இணைந்து வாழ்வதென்றால் — அது
இலகுவானதல்ல.
இணைவது பிரிவதற்கல்ல
என்ற தத்துவம் இருக்கும் போது
இணைகின்ற நிலைகளும்
சமகால நிகழ்வுகளும்
பிரச்சினைகளைத்
தூண்டித் தான் விடுகின்றன.

இணைகின்ற நிலைகள் எனும்போது
— வெளி நாட்டு மாப்பிள்ளை
முகத்தைப் பார்க்காமலே
முடிவுகள் எடுக்கப்படுகின்றன.
'மூட்டைகளுடன்' அனுப்பப்படுகிறாள்.
— மாப்பிள்ளை போக வேண்டும்
திடீர்க் கலியாணம் — அவர்
திடீர் என்றே போய்விடுகிறார்.
பணித உறவுகள் மிருக உறவாகின்றன.
— மாப்பிள்ளை கனடா
பொம்பிளை ஜேர்மனி
கலியாணம் இலங்கையில் பேசப்படுகிறது.
— கண்டதும் காதல் — அவர்களைக்
காணையில் காணவில்லை.
ஒரு மாத வாழ்க்கை — பின் தனியாக
ஓடியே வந்து விடுகிறார்கள்.

சமகால நிகழ்வுகள் எனும் போது
— நினைத்துப் பார்க்க முடியாத
நிரந்தர பிரிவுகள்.
— கூடி வாழ விரும்பியவர்கள்
குலைத்து விடப்படும் நிலை
— அமைதியான வாழ்க்கையில்
அநியாய நிகழ்வுகள் — ஐயோ
குடும்பமே கேள்விக் குறியாகிறது.
இவை மட்டுமா?
இன்னும் எத்தனை?
எத்தனை?.....
தாக்கங்கள் — அதன்
விளைவுகள், அழிவுகள்

இவற்றை எல்லாம்
அலசி விடுகிறோம்.
ஆராய்ந்து எழுதுங்கள்.
அனுபவங்களாக எழுதுங்கள்.
இது உங்கள் பகுதி — இல்லை,
உங்கள் வாழ்க்கை.

மணமான வாழ்விற்கு மணியான யோசனைகள்

"திருமணம்தான் உலகின் தாய். அதனுலேயே மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் பெருகவும், உலகம் சுழலவும் சொர்க்கம் நிறையவும் முடிகிறது" என்கிறார் டெய்லர் என்ற அறிஞர்.

இது வெறும் சாதாரண ஒரு சடங்கு அல்ல. ஆணும் பெண்ணும் அகத்திலும் புறத்திலும் ஒன்று பட்டு இரண்டறக் கலந்து விட்டனர் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாகும்.

புனிதமான சடங்குதான் இது. ஏனெனில் அதன் மூலம் இருவர் என்ற நிலை மாறி ஒருவர் என்னும் நிலை ஏற்படுகின்றது. பிரிந்து கிடந்த இரு உள்ளங்களுக்கு இடையே அன்பையும் அனுதாபத்தையும் வளர்த்து நல்வாழ்வு வாழச்செய்யும் ஒப்பந்தமாகும். இந்த இணைப்பு, நடக்க வேண்டிய ஓர் இயற்கை நியதி.

"திருமணம் இறை நெறியையும் கண்ணியும் காக்கும் கோட்டை. அணைக்கும் அரண், வாழ்வின் பகுதியை காத்துக் கொள்ளும் கற்பாறை." மனிதன் தனக்கொரு துணையைத் தேர்ந்தெடுத்து அவளுடன் அன்புடனும் கருணையுடனும் வாழும் வாழ்வே ஆண்டவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது. இது திருமணத்தினுல் தான் நிறைவு பெறும்.

வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் கல்யாணமே சிறந்தது. திருமணத்தினுல்தான் ஆணும் பெண்ணும் நட்புடன் நம்பிக்கையும் கொண்டு நீடிக்கச் செய்கிறது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்வாக்கு அறிவோம்

ஞான இலக்கிய நூல்கள் (8)

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

பழமொழி ஆகமம்

முன்னுரை:-

பழமொழிகளை நாங்கள் முதுமொழிகள் என்றும் அழைப்போம். எமது மூதாதையர் தம் வாழ்வில் அனுபவித்த உண்மைகளை, நெறிமுறைகளைப், பழமொழிகள் வாயிலாக விட்டுச் சென்றுள்ளனர். அவ்வாறே இந்நாலில் காணப்படும் பழமொழிகள் யாவும் அப்போது வாழ்ந்த மக்களின் அனுபவத்தின் வாயிலாகப் பிறந்த ஞானமாகும்.

இந்நூலின் ஆசிரியர் சலமோன் அரசர் எனக் குறிப்பிடப்பட்டபோதிலும் இங்கு காணப்படும் பழமொழிகள் யாவும் அவரிடமிருந்து பெறப்பட்டவையல்ல. அதிகாரம் 10 முதல் 22: 16 வரையுள்ள வசனங்களும், அதிகாரம் 25 முதல் 29 வரையுள்ள வசனங்களும் சலமோன் மன்னனின் பழமொழிகளாகக் கணிகப்பட்டுள்ளன. இந்நூலின் இறுதித் தொகுப்பானது கி.மு.5-ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதென நம்பப்படுகிறது.

ஞானிகளுடைய வார்த்தைகளையும், பழமொழிகளின் விளக்கத்தையும் மக்கள் ஏற்றுத், தியானித்து அதன்படி வாழ முயலவேண்டுமென்பதே இந்நூல் ஆசிரியரின் முக்கிய விருப்பமாகும். எமது அன்றாட வாழ்வில் நாம் எப்படி விவேகமாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டும் என்பதற்கு இந்நூல் பல நடைமுறை ஆலோசனைகளைத் தருகின்றது. சாதாரண மக்களும் இறைவனின் ஞானத்தின் மகிமையை அறிந்து அதைப் பெறுவதற்கு ஆர்வங்கொள்ளும் வகையில் மிக எளிய உரை நடையில் பலரையும் கவர்ந்து கொள்ளும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது. கேள்விகள் போல் உள்ள பழமொழிகளே பதில்களையும் வெளிப்படுத்துகின்றன. இதிற் காணப்படும் இறையியற் கருத்துக்களை அடுத்த இதழில் அறிவோம்.

எஸ். இயூஜின் பிரான்சிஸ்

பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

'இஸ்மாயில்' பற்றி எண்ணிக்கொண்டிருந்த ஆபிரகாமுக்கு ஆண்டவர் "நீ சந்தேகப்படாதே உன் "முறைப் பெண்" சாராள் ஒரு குழந்தையைப் பெறுவாள். அவனுக்கு 'ஈசாக்'' என்று பெயரிடு! அவனை மட்டுமல்ல அவன் சந்ததியையும் நாம் காப்பாற்றுவோம்'' என்று சத்திய வாக்குச் செய்தார்.

அதுமட்டுமல்ல "நீ பரிந்து பேசிய உனது மற்ற மகன் 'இஸ்மாயிலுக்காக' நீ கேட்டதையும் செய்வோம். இதோ அவனுக்கும் நாம் ஆசீர் அளிப்போம். அவன் குலத்தையும் பலுகிப் பெருகச் செய்வோம்! அவன் பன்னிரண்டு தலைவர்களைப் பெறுவான். அவனையும் மாபெரும் இனமாக விருத்தியடையச் செய்வோம்.

என்றாலும் அடுத்த ஆண்டு இதே நாளில் சாராள் உனக்குப் பெறஇருக்கும் ஈசாக்கோடு ஒரு புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவோம்'' என்று சொல்லி ஆண்டவன் மறைந்து விட்டார்.

விசுவாசம் இருந்தாலும் ஆபிரகாமுக்கு ஒரே குழப்பம்! தலைமுடியைப் பிய்த்துக் கொள்கிறார். குழப்பத்தின் மத்தியிலும் அவருள் ஆழ்ந்து கிடந்த 'விசுவாசம்' அவரை நிலைகுலையச் செய்யவில்லை.

ஏதோ ஆட்டுகிறார்—ஆடுவோம்! என்ற உறுதியுடன் ஆண்டவனின் பீதிக் கதையைக் கேட்கத் தயாராகிறார்.

ஆபிரகாமோடு சேர்ந்து மருமக்கள் நீங்களும் தானே கதை கேட்க ஆவலாய் உள்ளீர்கள்.

சொல்ல மறுப்பேனா?

கொஞ்சம் பொறுங்களேன். அடுத்த வாரத்தில் சொல்வேன்.

அன்புடன்
பைபிள் மாமா.

அறிந்துகொள்ளுங்கள் 30

தீமையில் நன்மை

"சூசை'' என்ற பெயருக்கு வளரட்டும் அல்லது சேர்க்கட்டும் என்று பொருள். வீரமாமுனிவர் "வளனார்'' என்று மொழிபெயர்க்கிறார். ஒவ்வொரு குலமுதல்வர்களையும் ஒவ்வொரு கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது பாரம்பரியம் ஆபிரகாம் விசுவாசத்தின் சின்னம் அது போல் சூசை உயர்பதவியின் கொடுமுடியாகக் காட்டப்படுகிறது.

ஆதியாகமத்தின் இறுதிப் பகுதிகள் சூசையைப்பற்றிப் பேசுகின்றன. அவரது உயர்பதவியையும், அப்பதவியிலும் ஒழுக்கம்-அன்பு, அடக்கம் தீமையைத் தீமையால் எதிர்க்காத குணம் உடையவராகக் கூறுகிறது. சூசை தன் உடன் பிறப்புகளால் வெறுக்கப்படுகிறார். அதற்குப் பல காரணங்கள் உண்டு. யாக்கோபு தன் பன்னிரண்டு புதல்வர்களில் சூசையை அதிகம் அன்புசெய்கிறார் காரணம் தன் அன்பு மனைவி இராக்கேலுக்குப் பிறந்தபடியாலும் அவரது முதிர்வயதில் பிறந்தபடியாலும் (ஆதி. 37: 3) அதே வேளை சூசையின் கனவுகளும் சகோதரர்களிற்கு வெறுப்பைக் கொடுக்கின்றது.

சூசை தன் சகோதரர்களால் வணிகரிடம் விற்கப்பட அவர்கள் அவரை எகிப்தில் விற்று விட்டார்கள். அக்காலம் அடிமை வியாபாரம் நடைபெற்ற காலம். அரசர்கள், தலைவர்கள், பெரும்குடிமக்கள் தம்பணிகளைச் செய்வதற்கு பல அடிமைகளை வைத்திருப்பர்.

புத்திபாரின் மனைவியின் தீய எண்ணத்திற்கு சூசை இணங்காதபடியால் தண்டிக்கப்படுகிறார். இறைவன் சூசையோடு இருந்ததால் சிறைவாழ்வு அவருக்கு உயர்பதவியைக் கொடுத்தது. புத்திபாரின் மனைவியின் தீய செயலுக்கு இணங்கிப் புத்திபாருக்குத் துரோகம் செய்வது மட்டுமல்ல, என் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யேன் என்று கூறுவதைப் பார்க்கிறோம். (ஆதி 39: 9) சூசை உண்மைக் கடவுள் நம்பிக்கையில் வளர்ந்திருந்தார். அதனால் அவர் உயர்பதவி அடைகிறார்.

சூசை தன்னோடு இருந்த சிறைக்கைதிகளின் கனவுக்கும், பாரவோனின் கனவுக்கும் விளக்கம் கூறுகிறார். (ஆதி.40ம் அதிகாரம்) அக்காலத்தில் பல நாடுகளில் குருக்கள், பூசாரிகள் கனவுகளுக்கு பொருள் சொல்வார்கள். இதனால் அரசமாளிகையில் இப்படிப்பட்ட அறிஞர்களான தீர்க்கதரிசிகள் இருந்தனர். எகிப்திய அரசன் மனையிலும் இப்படிப்பட்டவர்கள் பலர் இருந்தும் பொருள் கூற முடியவில்லை. சூசை பொருள் கூறுகிறார். இறைவனின் தனிப்பட்ட கரம் சூசையோடு இருந்தது. ஆண்டவர் அவரோடு இருந்தார்.
(ஆதி. 39: 2, 3, 21, 23–41)

சூசையின் வரலாறு மூலமாக இறைவன் தீமையை நன்மையாக மாற்றுவார் என்ற உண்மை தெளிவாகிறது. (ஆதி. 50: 20)

இஆம். ஜெயசீலன்

காவலன் கண்மணிகள்

மடல்: 3.

ஏனென்றால் நாம் வெறும் மனிதர்களோடு
போராடுவதில்லை, தலைமை ஏற்போர்,
அதிகாரம் தாங்குவோர், இருளில் மூழ்கிய
இவ்வுலகின் மீது ஆதிக்கம் செலுத்துவோர்,
வான் வெளியில் திரியும் தீய ஆவிகள்
ஆகிய இவர்களோடு போராடுகிறோம்.

(எபே. 6: 12.)

யேசுவுள் அன்பான கண்மணிகாள்,

கட்டமிட்ட பகுதியினைக் கருத்திற் கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள் ஒன்றான எமக்கேன் இத்தனை சோதனையும் வேதனையும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

விடுதலை என்ற வார்த்தைக்கு விளக்கம் தெரியாது வீணே அலைய வேண்டாம்.

நோயால் வரும் நோவால் மனம் கலங்காதீர்கள்.
கல்வியை இழந்து விட்டோம் எனச் சோராதீர்கள்.
தனித்து விட்டோம் எனத் தவிக்காதீர்கள்.
"என் பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் தருவேன்.
உங்களுக்கு என்மீது அன்பிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்'' (அருளப்பர் 14: 14, 15).

எம் ஆண்டவரின் அழியாத வார்த்தைகளை எம் உள்ளத்தில் ஊன்றி, எம் உள்ளத்தை இறை அன்பால் நிரப்பிப் பிறர் அன்பாக மாற்றி வாழ்வோம்.

நன்றி.

என்றும் உங்கள்
அன்பின் அன்புவிழி

★ ★ ★

படிப்பினை: (நாமக்கல் கவிஞர்)

தொடர்ச்சி:

5. புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாய் எண்ணிக்
காந்தியைப்போல் பொதுநோக்கும் பொறுமை
வேண்டும்.
மகிழ்ச்சியிலே மதிமயங்கித் தடுமாறாமல்
காந்தியைப் போல் மனசடக்கப் பயில வேண்டும்.
வெருட்சிதனை வேரோடு களைந்து நீக்கக்
காந்தியைப்போல் விரதங்கள் பழக வேண்டும்.
நிகழ்ச்சிகளைக் காந்தியைப் போல் நிறுத்துப் பார்த்து
நேர்மையுடன் குற்றமெல்லாம் நீக்கவேண்டும்.

6. வருகின்ற யாவர்க்கும் எளியகை
காந்தியைப் போல் வரவேற்கும் வழக்கம் வேண்டும்.
தருகின்ற சந்தேகம் எதுவானாலும்
காந்தியைப் போல் தணிவாகத் தர்க்கம் செய்து
திரிகின்ற மயக்கத்தைத் தீர்த்து வைத்துத்
திடமறிந்த வழிகாட்டும் தெளிவு வேண்டும்.
புரிகின்ற புத்திமதி எது சொன்னாலும்
புண்ணின்றிக் காந்தியைப் போல் புகட்ட வேண்டும்.
காந்தியின் படிப்பினை.....தொடரும்.....

★ ★ ★

சிந்திக்க சிந்தை தெளிய

புனித சின்னப்பரின் திருமுகம்:

இறைவனுக்கு ஏற்படையவனே இல்லை, ஒருவன் கூட இல்லை.
உணர்வுள்ளவன் ஒருவனுமில்லை,
கடவுளைத் தேடுபவன் எவனுமில்லை,
எல்லாரும் நெறி பிறழ்ந்தனர்,
ஒருங்கே கெட்டுப்போயினர்;
நன்மை செய்பவன் எவனுமில்லை. ஒருவன் கூட இல்லை,
அவர்களது தொண்டை திறந்த பிணக்குழி
அவர்களது நாக்கு வஞ்சனையே பேசிற்று.
அவர்கள் உதட்டில் பாம்பின் நஞ்சுள்ளது,
வாயில் சாபமும் கசப்பும் நிரம்பியுள்ளது.
இரத்தம் சிந்துவதென்றால் அவர்கள் கால்கள் விரைகின்றன
அவர்கள் கால்கள் படும் இடத்தில் அழிவும் துயருமே உண்டு.
அமைதியின் நெறியோ அவர்களுக்குத் தெரியவில்லை.
அவர்கள் மனதில் கடவுள் அச்சம் என்பதில்லை.

(உரோமர்: 3: 10—18)

தந்தவர்: சலேஸ் சின்னப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வார வழிபாடுகள்--1988

யாழ். புனித மரியன்னை பேராலயம்

குருத்தோலை ஞாயிறு : 27-3-88

காலை 5-30 திருப்பலி
,, 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி, ஆயரின் கூட்டுத் திருப்பலி.
,, 7-45 திருப்பலி.
மாலை 5-30 திருப்பலி.

பரிசுத்த வாரத்தின் திங்கள் 28-3-88

மாலை 5-00 திருத்தைலம் மந்திரிக்கும் ஆயரின் கூட்டுத் திருப்பலி.

பரிசுத்த வாரத்தின் வியாழன் 31-3-88

மாலை 5 00 பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு, நற்கருணை எழுந்தேற்றம்.

திருப்பாடுகளின் வெள்ளி 1-4-88

காலை 6-30 பாடுகளின் பாதை (பேராலய முன்றலில்)
மாலை 3-00 வார்த்தை வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து, ''ஆசந்தி'' பவனி.

புனித சனிக்கிழமை 2-4-88

மாலை 6-00 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு, ஆயரின் கூட்டுத் திருப்பலி.

ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு 3-4-88

திருப்பலிகள் :
காலை 5-30, 6-30, 7-30.
காலை 6-30 ஆயரின் கூட்டுத் திருப்பலியும் பாப்பிறையின் ஆசீரும்.

— பங்குத் தந்தை

வேதாகம வினாவிடைப் போட்டி-14

வேதாகம வினாவிடைப் போட்டி 13க்கு எவருமே விடை அனுப்பவில்லை. எனவே அந்த வினாக்கள் மீண்டும் தரப்படுகின்றன. விடைகளை லேவியர் ஆகமம், முதல் ஐந்து அதிகாரங்களில் காணலாம்.

விடைகளை மாத்திரம் தபால் அட்டையில், தெளிவாக எழுதி உங்கள் பெயர், முகவரியுடன் 8-4-88ஆம் திகதிக்கு முன் பாதுகாவலன், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூ. 15/=. விடையும், பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 22-4-88இல் வெளிவரும்.

வினாக்கள்

1. யோசுவாவின் தந்தையின் பெயர் என்ன?
2. யோசுவா எந்த நகரை வேவுபார்க்க ஒற்றர் இருவரை அனுப்பினர்?
3. ஆண்டவர் மோயீசனோடு இருந்ததுபோல், யோசுவாவோடும் இருக்கிறார் என்று காட்ட என்ன அடையாளம் கொடுத்தார்?
4. வீரர் கூட்டம் எவ்வாறு இஸ்ராயேல் மக்கள்முன் சென்றது?
5. இஸ்ராயேல் மக்களுக்கு ஆண்டவர் செய்த செயல்களைக் கண்டு அஞ்சிய அரசர்கள் யாவர்?
6. மன்னா பொழிவது ஏன் நின்றது?

வாழ்வுதரும் இறைவாக்கு

"உன் வாயில்
நம் வார்த்தைகளை
ஊட்டினேம்.
நமது கையின் நிழலில்
உன்னைப் பாதுகாத்தோம்"
என்கிறார் ஆண்டவர்.

இசை. 52 : 16

இறைவாக்கு வாழ்வுதரும்

"எம் கருத்து" குறள் தெளிவுரை

அழிவு இல்லாததாய், வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படை.

வாசகர் கருத்து

11-3-1988 காவலன் எம் கருத்து "மண்ணு உயிரா" தொடர்பாக சில கருத்துக்களை எழுத ஆசைப்படுகின்றேன். 4-2-1948இல் இத்தீவு பிரித்தானியரிடமிருந்து ஒருவித போராட்டமுமின்றி சுதந்திரமடைந்தது. அன்று தொட்டு ஆண்டு வந்தவர்கள் அனைவரும் அதிகாரத்தை எப்படியும் கைப்பற்ற வேண்டுமென்ற குறுகிய மனப்பான்மையுடன் தேவையற்ற பிரச்சினைகளை, விஷேடமாக இனவாதம். மொழிவாதம், சமயவாதம் போன்ற கேவலமான துவேசங்களை மக்களிடையே பரப்பி, நாட்டைச் சின்னபின்னமாக்கினார்கள்.

பத்திரிகைகளின் தலையங்கங்கள், ஆசிரியர் கருத்துக்கள், அரசியல் கூட்டங்களை அவதானித்தால் நாம் வெட்கித் தலைகுனிய வேண்டும். எங்கும் வகுப்புவாதம் தான் முன்நின்றது.

ஆனால், இவ்வரசியல் வாதிகளில் அனேகர் வெளிவேடக்காரராகவே நடித்தனர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிமி கார்ட்டர் அவர்கள் தாம் பதவியில் இருந்து விலகும்போது உலக நாட்டுத் தலைவர்களுக்கு பகிரங்கமாக அனுப்பிய கீழ்க்காணும் அறிவுரைகள் மிகவும் உன்னதமானவை.

"இறைபக்தியற்ற, துவேச, வகுப்புவாத அரசு எப்படித்தான் பாடுபட்டு முன்னேற விரும்பினாலும், ஒருபோதும் முன்னேறாது, மாறாக, அது தனது அழிவையும், உலகின் அவமானத்தையுமே நிறையப் பெறும்"

"ஓர் வாசகர்",
பலாலி தெற்கு, வசாவிளான்.

2ஆம் வருட நினைவு அஞ்சலி

S. A. கொன்ஸ்ரன்ரைன்
இறைவன் அடியில்:
25—3—1986

எங்களின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து, எம்மை விட்டுப் பிரிந்த அன்பின் தெய்வத்தின் ஆன்ம சாந்திக்காக பண்டத்தரிப்பு பத்திமாலய த்தில் 25-3-88லும், சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில்26-3-1986 காலை 6-15 மணிக்குத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.இவரை அறிந்தவர்களையும், சுற்றத்தவரையும் இறைவனிடம் இவருக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சில்லாலை. A/7.

31ஆம் நாள் நினைவஞ்சலி

S. பயஸ் ரட்ணசேகரம்
(செல்வின்)

மண்ணில்: 25-09-1950
விண்ணில்: 20-02-1988

அன்பின் இறைவா! உம்மிடம் அழைக்கத் திருவுளமான செல்வின் என்னும்உமது அடியானை உமது பேரின்ப வீட்டின் பங்காளியாக்கியருளும்மை மன்றாடுகிறோம்.

இவர் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள்,
மைத்துனிமார், பெருமக்கள்,
உறவினர்.

பெரிய விளான்,
இளவாலை. A/10

12ஆம் வருட நினைவஞ்சலி

ம. மரியதாஸ் (செல்வநாயகம்)

தோற்றம்: 7-4-1956
மறைவு; 20-3-1976

உயிர்ப்பும் உத்தானமும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். (அரு. 11—25)

நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும்சுவாமி, முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக. இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-3-1988 காலை 6 மணிக்கு எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது,

இவரின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதர சகோதரிகள், மைத்துனிமார்.

A/9.

நெஞ்சே...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக என் அன்பு நெஞ்சே! பாவ வாழ்க்கைக்கு முற்றுமாக விடைகொடுத்து விடு. நதியின் ஓட்டம் பள்ளத்தை நோக்கியே செல்வது போல் உன் வாழ்க்கை நதியும் ஆண்டவன் என்ற கடலை நோக்கிச் சென்றே கலக்கட்டும் நான், எனது, எனக்கு என்ற பதங்கள் நாம், எமது, எமக்கு என்றாகட்டும்.

குருத்து ஞாயிறு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில சமயங்களில் இது உங்களுக்கு அதிக துன்பத்தைத் தருவதானாலும், ஆண்டவருக்கு அண்மையிலிருக்க அவளிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் மரியாள் என்னும் மறை பொருள்மீது நீங்கள் தியானம் செய்வது, மரியாள் மேல் நம் பிக்கை நிறைந்த செபமாக வெளிப்படுவதாக. செபமாலை உங்கள் வாழ்நாள் முழுதும் ஒரு நம்பிக்கையான துணையாக இருக்கும்படிக்கு அதன் அழகைக் கண்டுணர முயற்சி செய்யுங்கள்.

உலகின் சகல இளைஞர்களுக்கும் அன்புடன் ஆசிகூறி இந்தச் சுருக்கமான செய்தியை முடித்துக் கொள்கிறேன். திருத்தந்தை தன் செபத்தின் மூலம் உங்கள் ஒவ்வொருவருக்கும் அன்னையிலிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் செய்யும் ஆன்மீக ஆயத்தத்திலும், 1988 உலக இளைஞர் தினம் உங்கள் மறை மாவட்டத்தில் கொண்டாடப்படும் போதும், எனது அப்போஸ்தல ஆசி உங்களோடிருப்பதாக.

வத்திக்கானிலிருந்து திருவருகைக்காலத்தில் 3ஆம் ஞாயிறன்று 1987 மார்கழி 13ஆம் திகதி எழுதப்பட்டது.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

2ஆம் ஆண்டின் நினைவின் நிழல்

தோமஸ் பிரான்சிஸ்க்கம்மா

மண்ணில்: 09-12-1914
விண்ணில்: 09-4-1986

அன்னையின் ஆன்ம சாந்திக்காக 9-4-1988 சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

PATHUKAVALAN

முன்னேற்றமே அமைதி

இராணுவத்திற்காக மட்டும் செலவிடப்படும் தமது நிதி ஆதாரங்களை, வறுமை ஒழிப்புப் பணிகளுக்குத் திருப்பிவிடுமாறு உலக நாடுகளுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர். ஜனவரி 26ஆம் நாள் ரோமை நகரில் நடைபெற்ற I. S. A. D அனைத்துலக வேளாண்மை வளர்ச்சி வைப்பு நிதி, என்ற 142 நாடுகள் அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய திருத்தந்தை, அமைதி என்பதற்கு முன்னேற்றம் என்ற புதுப்பெயரினைச் சூட்ட முன்வருமாறு உலக நாடுகள் அனைத்தையும் கேட்டுக் கொண்டார்.

பட்டினிச் சாவுக்கு மக்கள் ஆளாவதை இனி உலகம் பார்த்திருக்காது என்ற ஆவல் வெறும் கற்பனைக் கோட்டையல்ல. அது ஒரு உளப்பூர்வமான நம்பிக்கையாய் உருவெடுக்க வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார். பெரிதும் வறுமையுற்ற நாடுகளுடன் பொருளாதார கூட்டுறவை வளர்ந்த நாடுகள் செய்து கொண்டு உதவினால் அன்றி இது நடைபெறாது. அணு ஆயுதங்களையும், கேந்திர, கனரக ஆயுதங்களையும் கணக்கின்றி உற்பத்தி செய்யச் செலவிடப்படும் பெருந்தொகை, வளர்ச்சிப் பணிகளுக்கெனத் திருப்பி விடப்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் திருத்தந்தை கூறினார்.

ஈழ இறையியல் ஆலோசகர்

ஆசிய ஆயர் அவையின் கீழ் இயங்கும் பொது நிலையினர்க் கழகங்கவின் கூட்டம் மாசி 25 முதல் பங்குனி 5 வரை தாய்லாந்தில் நடந்த போது ஆசியாவின் 14 நாட்டுத் திருச்சபைகளின் பிரதிநிதிகளாக 15 ஆயர்களும், 5 குருக்களும் 1 அருட்செல்வியும், 20 பொது நிலையினரும் கலந்து கொண்டனர். சென்ற வருடம் உரோமையில் நடைபெற்ற பொது நிலையினரைப் பற்றிய ஆயர் கூட்டத்தின் பின் நடைபெற்ற முதல் ஆசிய கூட்டம் இதுவாகும். பொது நிலையினருக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தையும் பொறுப்பையும் துரிதமாக அதிகரிக்கும் நோக்குடன் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு இறையியல் ஆலோசகராக யாழ்.புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு S. J. இம்மானுவேல் அடிகளார், பங்கு கொண்டு "ஆசிய பொது நிலையினரின் நீண்ட பயணத்திலே இக் கூட்டம் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கிறது. கடந்த கால ஆயத்தங்களின் பயனாக பொது நிலையினர் தொடர்ந்தும் விறுவிறுப்புடன் பயணத்தைத் தொடர்ந்து நடத்த ஏதுவாக அமையும்" என்றும் கூறினார்.

14 நாட்டுத் திருச்சபையின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஆங்காங்கே பொது நிலையினர் வகிக்கும் இடமும், பொறுப்பும் ஆலோசிக்கப்பட்டு ஆசியாவின் இறைமக்கள் எல்லோர்க்கும் ஓர் அழைப்பிதழ் பிறப்பிக்கப்பட்டது. அதில் பொது நிலையினர் தம் நாட்டின் திருச்சபைகள் முதிர்ச்சி அடைவதற்கு ஊக்கம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தங்களுடைய விசுவாச சாட்சியத்திலும் சூழ்நிலைக்கேற்ற கிறிஸ்தவ ஆன்மீகத்திலும் வரவிருக்கும் இறையரசைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும் குருக்களும் பொதுநிலையினரும் நாட்டின் சூழ் நிலையிலே ஒன்றாக உருவாக்கப்பட வேண்டுமென்றும் வேண்டப்பட்டது.

நாவண்ணனின் "தீபங்கள் எரிகின்றன"

வெரித்தாஸ், மார்ச் 13.

இலங்கையில் 1985ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5ஆம் நாள், இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட, அருட்தந்தை மேரி பஸ்ரியன் என்பவரது வாழ்க்கை வரலாற்றினைத் 'தீபங்கள் எரிகின்றன' என்ற தலைப்பில், நூல் வடிவில் வழங்கியிருக்கிறார் திரு. எம். சூசைநாயகம் என்ற நாவண்ணன். வங்காலை என்ற இடத்தில் மன்னார் மறை வட்டத்தில், அருட்தந்தை மேரி பஸ்ரியன் ஆலயத்தில் இருந்த பொழுது. இலங்கை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்தார். இராணுவத்தினர் தான் அருட்தந்தை மேரி பஸ்ரியனைப் படுகொலைசெய்ததாகத் திருச்சபைத் தலைவர்கள் கூறி வந்தாலும், இதனை இலங்கை அரசும், இராணுவமும் மறுக்கின்றனர், எதிர்க்கின்றனர். அருட்தந்தைமேரி பஸ்ரியனின் உடல் என்ன ஆயிற்று என்பதே யாருக்கும் தெரியாது. அருட்தந்தையின் உடலையாவது தம்மிடம் ஒப்படைக்குமாறு திருச்சபைத் தலைவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டபோதிலும், அவர்களுக்கு உகந்த பதில் தரப்படவில்லை. ஏழை, எளிய மக்களுக்கு, அருந்தொண்டாற்றி வந்த 36 வயதான கத்தோலிக்க அருட்தந்தை மேரி பஸ்ரியன், அவர்களது உரிமைகளைக் காப்பதற்காகவும் போரிட்டதாற்தான், இராணுவத்தினரால் கொல்லப்பட்டார் என்று 'தீபங்கள் எரிகின்றன' புத்தகத்தின் ஆசிரியர் நாவண்ணன் கூறினார்.

சண்டையின் விளைவாகப் பட்டினிச் சாவு

எத்தியோப்பியாவில் மேலும் 50 இலட்சம் பேர் பட்டினிச் சாவுக்கு ஆளாகும் அபாயம் தோன்றியிருக்கிறது என்று எத்தியோப்பியா சென்று திரும்பிய ராஜர் எச்செல்டாரின் கூறியிருக்கிறார். நீதி, மற்றும் அமைதிக்கான திருத்தந்தையின் ஆணைக்குழுவின் தலைவர் கிருமினல் ராஜர் எச்செல்டாரின் திருத்தந்தை அளித்த ஆணையின் பெயரில் எத்தியோப்பியாவுக்கு சென்று அங்கு பசிப்பிணியால் வாடும் இலட்சக்கணக்கான மக்களை நேரடியாகச் சந்தித்தார். எத்தியோப்பியாவில் உணவுப் பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதில் பெருந் தடைகள் இருப்பதாகவும், உள்நாட்டுக் கொரில்லாச் சண்டையின் விளைவாக உணவுப் பொருட்கள் மக்களைச் சென்றடைவதில்லை என்றும் இதன் விளைவாகவே பட்டினிச் சாவு அபாயம் பெருகிக் கொண்டிருக்கிறது என்று கிருமினல் ராஜர் எச்செல்டாரின் கூறியிருக்கிறார்.

கெரில்லாக்கள் துயர் உறும் தம் மக்களின் நிலையை எண்ணிப் பார்த்து தமது கெரில்லா போர் முறையை தற்காலிகமாக வேனும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ரஷ்யாவுக்கு பைபிள்

சோவியத் ரஷ்யாவுக்கு 25.000 ரஷ்சிய மொழி விவிலிய நூல்களை மேற்கு ஜேர்மனி அனுப்பியிருக்கிறது. இவாஞ்சலிஸ்ட் திருச்சபையிற் சேர்ந்தவர்கள் 10 இலட்சம் விவிலிய நூல்களை சோவியத் ரஷ்சியாவுக்கு அனுப்ப அனுமதி பெற்று விட்டனர். முதற் கட்டமாக 35,000 பைபிள்கள் இந்தத்திங்கள் தொடக்கத்தில் ரஷ்சியாவிற்கு அனுப்பப் பட்டது.

ஆவுசி ஆயர் பேரவை

ஆஸ்திரேலியாவில் சமூக தர்மத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்திப் பேணவும் பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அனைவரது எண்ணங்களையும், இதயங்களையும் வெல்லும் பணியில் ஈடுபட வேண்டுமெனக் கத்தோலிக்க திருச்சபை ஆயர்கள் பேரவை முடிவு செய்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் 200 வது ஆண்டு விழா இவ்வாண்டு கொண்டாடப்படும் வேளையில் சமூக தர்மத்தையும், பழங்குடியினர் உரிமைப் பாதுகாப்பையும், மையமாகக் கொண்ட திருச்சுற்றுமடல் ஒன்றை ஆஸ்திரேலியக் கத்தோலிக்க ஆயர்கள் வெளியிட்டுள்ளனர். மேற்கத்தேயர் ஆஸ்திரேலியாவிற் சென்று குடியேறிய நாளிலிருந்து, மண்ணின் மைந்தர்கள் தம் உணர்வுகளையும், உரிமைகளையும் இழக்க நேரிட்டது என்பதை, ஆயர்கள் ஒப்புக் கொள்கின்றனர். பழங்குடியினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஒப்புக் கொண்டு புதிய சமூக தர்மத்தை நோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரஷ்யக் கத்தோலிக்கர்

சோவியத் ரஷ்யாவில் யுக்ரேன் பகுதியில் தலைமறைவாய் இயங்கிவரும் கத்தோலிக்கர்கள் தம்மைச் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளுமாறு ரஷ்ய ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கான விண்ணப்பம் ஒன்று சோவியத் நாடாளுமன்றத்திடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ரஷ்ய ஆர்தடக்ஸ் திருச்சபையுடன் யுக்ரேனியன் கத்தோலிக்க திருச்சபையை சோவியத் ஆட்சியாளர்கள் 1946 ம் ஆண்டு இணைத்தனர். என்றாலும் நூற்றுக்கணக்கான குருக்களும், கன்னியர்களும், இறை மக்களும் யுக்ரேனியன் கத்தோலிக்க திருச்சபையைத் தலை மறைவாய் வளர்த்து வருகின்றனர். தம்மைச் சட்டரீதியாய் அங்கீகரிக்கும்படி சோவியத் அரசை அவர்கள் இப்போது கேட்டுக் கொண்டுள்ளனர். யுக்ரேனியன் கத்தோலிக்க திருச்சபையின் 1000 ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள வருமாறு அவர்கள் திருத்தந்தைக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

திருத்தந்தை ஏழைகளுடன் உணவு

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் ஜனவரித் திங்கள் 3 ஆம் நாள் ரோம் நகரின் வீதிகளில் வாழும் ஏழை எளியோரில் 150 பேரை வத்திக்கான் நகருக்கு அழைத்து, அவர்களுடன் சேர்ந்து இறை வழிபாடு நடத்திய பின், அவர்களுடன் உணவருந்தினார். திருத்தந்தை ஒவ்வொருவருடனும் தனித் தனியாகவும் சிறிது நேரம் சம்பாஷணை நடத்தினார். அனைவரது துயரங்களும் தன்னைப் பெரிதும் பாதித்து விட்டதாகவும், ஒருவர் மற்றவரை அன்பு செய்தால் இத்தகைய துயரங்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தாம் தெரிந்து கொண்டு விட்டதாகவும் திருத்தந்தை கூறினார்.

நூல் அறிமுகம்

ஆண்டவர் நல்லவர் சுவைத்துப் பார்; சுவை I.

இந்நூலின் தொகுப்பாசிரியர் அருட்திரு ச. யோ. பிரான்சிஸ் அ.ம.தி. இந்நூலில் இவர் முதல் முப்பது சங்கீதங்களுக்கும் சுருக்கமான விளக்கவுரை தந்துள்ளார். திருவழிபாட்டிலும் மற்றும் விவிலிய வழிபாடு, குழுச் செபங்களிலும் மிகவும் பயன் படக் கூடியது இந் நூல். படித்துப் பயன் பெறுங்கள்.

விலை. ரூபா. 5.00

கிடைக்குமிடங்கள்:

அமல உற்பவம், கொழும்புத்துறை. — யாழ். மறைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.

இளவாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கன்னியரின் சேவைநலம் பாராட்டும் பிரியாவிடை வைபவம் பங்குனிமாதம் 2ஆம் திகதி இளவாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. புது அதிபராக அருட்செல்வி பொனவஞ்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைஞர் தினம்

எதிர்வரும் (27 - 3 - 88) குருத்தோலை ஞாயிறன்று, யாழ் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் இளைஞர், யுவதிகளுக்காக "இளைஞர் ஒன்று கூடல்" நடைபெறவுள்ளது. காலை 9-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை, சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கு பற்றுபவர்கள் மதிய உணவையும், கொண்டுவருமாறு அழைக்கப்படுகின்றனர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்